செ.வெ.எண் :- 573 நாள் :- 2.10.2012

தலைமைச் செயலகம்,
சென்னை – 600009.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நேர்முகக் கடித எண்.13718/2012–1, தநாசமபே(சமுவ–1), நாள் 2.10.2012

புரட்டாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2043

அன்புடையீர்,

பொருள் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை – அடுத்த கூட்டம் – தேதி மாற்றம் அறிவித்தல்.

------

தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் இந்திய அரசமைப்பு, பிரிவு 174 (1)–ன் கீழ், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டத்தை ஏற்கெனவே அறிவித்த 30.10.2012–ஆம் நாளுக்கு பதிலாக, 2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10–ஆம் நாள், புதன்கிழமை, காலை 10.00 மணிக்கு சென்னை–600009 தலைமைச் செயலகத்திலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் கூட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தங்கள் உண்மையுள்ள,

(அ.மு.பி. ஜமாலுதீன்)
செயலாளர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

செ.செ.எண் :- 573 நாள் :- 02.10.12

தலைமைச் செயலகம்
சென்னை – 600009.

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

நே.மு.கடித எண். 13794/2012–1, தநாசமபே(சமுவ–1), நாள் 2.10.2012

புரட்டாசி 16,
திருவள்ளுவர் ஆண்டு 2043

அன்புடையீர்,

பொருள் : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை – பேரவைத் தலைவர் தேர்தல்– நாள் மற்றும் நேரம் அறிவித்தல்.

------

திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் பேரவைத் தலைவர் பதவியிலிருந்து விலகியுள்ளதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை நிரப்புவதற்காக, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 7 (1)–ன் கீழ் (விதி 7–ன் நகல் இணைக்கப்பட்டுள்ளது), **2012–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 10 –ஆம் நாள் புதன்கிழமை** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவர் தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 'நாள்' குறித்துள்ளார்கள்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 7(2)–ன் கீழ், **2012 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9–ஆம் நாள் செவ்வாய்க்கிழமை, நண்பகல் 12.00 மணி** வரையில் பேரவைத் தலைவர் தேர்தலுக்கான வேட்புத்தாள்கள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரால் பெற்றுக்கொள்ளப்பெறும்.

வேட்புத் தாள்களை செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

தங்கள் அன்புள்ள,

(அ.மு.பி. ஜமாலுதீன்)
செயலாளர்

...செய்தி, மக்கள் தொடர்புத் து...
சென்னை-...